
www.padippakam.com

க.ஆதவன்



# உள்வெளி

படிப்பகம்

www.padippakam.com

பல கண்களுக்கு

ஒளி வழங்கி

இப்பொழுது

ஒளி இழந்து விட்ட

எந்தையின்

கண்களுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

# "அம்மா"

அந்த இனிய மாலையின்
நிசப்தத்தைக் கிழித்து
அலறினன் அவள்.

"வேண்டாம். ஒன்றுமறியா அப்பாவி அவன்
வேண்டாம். விடுங்களவனை.
அற்பன் ஏதுமறியான்"

புழுதி மேலெழுந்து பறந்தது.
புறங் கைகள் நிலத்தில் தோய்ந்து
தோலுரிந்தது.
மீண்டும் புறங்கைகள்
முட்டி போட்டு முக்காலிட்ட
முழந்தாளில் ஊன்றி
முகத்திற்கு முண்டி கொடுத்தன.
மூச்சிட்டாள் அவள்.

"நீ ஒன்றும் கெஞ்சாதே தாயே
இவர்களுக்கு இவை விளங்கா.
நான் போகிறேன்.
என் முகம் சிதைக்கப்படும் வரையில்
உன் மூச்சுக்காய் வாழ்வேன்"

படிப்பகம்

www.padippakam.com

# ஏதாவது ஒன்றை

"சொல்லி விடு
எல்லாவற்றையும்
இதயத்தின் புயல், தென்றல்
வசந்தம்
கொட்டிவிடு
எல்லாவற்றையும்தான்"

* *

சொன்னான்
கொட்டினான்
இன்னும் எனக்கு என்ன வேண்டும்?
முழுவதும் வரவில்லை என்கிறேனா...?
முடிந்தவரை முயன்றான் என்கிறேனா?
இன்னும் எனக்கு என்ன வேண்டும்?

* *

முழுவதும் கொட்டி விட்டேன் தானா?
முடிந்தவரை முயன்று விட்டேன்தானா?
யாரைப் பார்த்து
எங்கு போய்
விடைகளைச் சரிபார்ப்பது?

* *

போ!
வருகிறேன் பின்னால்
அல்லது—
வா!

படிப்பகம்

www.padippakam.com

# மனைவி அமைவதெல்லாம்

ரூபாக்களை எண்ணி மேசையில் வைத்தேன்
நான்.
கணக்கில் துட்டில்
துண்டு விழுகிறதென்
துண்டு விரிக்க மறுக்கும்
சுசீலா

* *

''நாயே வா!
உன் கனைத்திற்கு
நான் அடிமையல்ல.
துட்டுக்குத் துண்டுவிரிக்கும்
'தூயவள்' உனை நானறிவேன்.
'முலைகள் முயங்க
உதடு சிரித்தபடி
உட்செல்லும்
உக்கிரம் அறியா
'உத்தமி' நீதான்
நான் வருகிறேன்
தினமும் உனைத்தேட.

* *

ஏதாவது புரிகிறதா
சுசீலா உனக்கு?

* *

நானும் ஒரு
ஸ்ரீராமன் தான்.

www.padippakam.com

# தோழனின் கல்லறைக்கு முன்னால்

நீ இறந்து விடுவாய் என்பது
பலருக்குத் தெரிந்துதான் இருக்கிறது.
இல்லாவிடில்—
உனக்கு இவ்வளவு சோறும் அன்பும் கிடைத்திருக்காது

* *

என்னூர் மக்கள்
சுத்தக் கஞ்சன்கள்.
அதுவும்
சாப்பாட்டு விஷயத்தில் சுத்தமோசம்.

* *

நீ—வயிறு புடைக்கத் தின்னும்
என,
பொய்தானே சொல்கிறாய்.

* *

என்னூர் மக்கள்
உனக்கு
வாரி வாரி, அள்ளி அள்ளி,
வழங்கினார்கள்.
என,
பொய்தானே சொல்கிறாய்.

* *

நண்பனே—
தோழனே—
தயவு செய்து சொல் உண்மையை.
என்னூர் மக்களைப் பற்றி...!

படிப்பகம்

www.padippakam.com

# ஈழக் கரையில் நங்கூரமிடும் கப்பல்களும்... என் சோதரிகளும்...

காலம் கடந்து விட்டதுதான் —எனினும்
உனக்கெனச் சில உண்மைகளைப்
பாதுகாத்து வைத்திருக்கிறேன்.

* * *

உண்மைகளை...
நினைவுகளை...
பாதுகாப்பதென்பது
சுலபம் என நீ நினைக்கக்கூடும்,
உனக்குத் தெரிந்ததெல்லாம்,
பாரீஸும் ஏதன்ஸும் ரோமும் ரோக்கியோவும்
பிராங்போட்டும்
இன்னும் மின்னும் இரவு 'பல்பு'களும் தான்.
உன்னைச் சுமப்பதற்குக்
கப்பல் இருக்கிறது.
என்னை சுமப்பதற்கு
எது இருக்கிறது...?

* * *

நான்—
பூசனிக்காய் விலை மட்டுமே
கணக்குப் பார்க்கத் தெரிந்த
பக்கத்து வீட்டு பருவதம் அக்காவுடன் இணைந்து
உன் கனவுகளை

படிப்பகம்

www.padippakam.com



'இல்லை'
உன் கடிதங்களை
வாசிக்க வேண்டியதாயிற்று.
* * *

"ஒரு நாள்—
உன் கப்பல் வந்தது
நினைவுகளைக் கொட்டிவிட்டு
நங்கூரத்தைத் தூக்கி—
மீண்டும்— ஆழ் கடலுள்ளே…"

என, அவர்கள்—
விசாரித்த பொழுது சொன்னார்கள்.

1985-07-19

படிப்பகம்

# விசை

விசை
தட்டப்பட்டுவிட்டது
எல்லாமே முடிந்து போயிற்று.

எனைப் பாதுகாத்த
இராசமக்காவும் சின்னராசண்ணையும்
அந்த வீட்டின்
சாமிப்பட மூலையில்
மூச்சற்றுச் செத்துக் கிடந்தனர்.

* *

மரவள்ளிக் கிழங்கு
உலையில் கொதிக்க வைத்து
அவித்துத் தந்த
மனிதரை மறந்து
ஓடி வந்துவிட்டேன் நான்.

* *

நான்
இன்னமும் சாகவில்லை.
'இராசமக்கா...!
காற்றடிக்கிறது
கறிமுருங்கை முறியும்
கவனம்'

* *

www.padippakam.com



கண்கள் களிக்க
கதை சொன்ன காட்சி
கணத்தில் கழிந்தது
(F) பக்டறிச் சங்கூத
பதியும் உன் நினைவுகளில்...
சின்னராசாண்ணையின் வரவு.
உள்ளே இருந்தாலும்
உன் நினைவறியா
இளைஞன் நானல்ல.

*  *

நான் வந்து விட்டேன் வெளியே
விசைகள்
தட்டப்பட்டுவிட்டன
(F) பக்டரிச் சங்கு ஊதுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் தொடரும் பயணங்கள்

பனைகள்—
இரு மருங்கும் பனைகள்
தலை விரித்தாடும் பனைகள்
தலை அசைத்து விடை கொடுக்கும் பனைகள்

* *

கையில் பயணப் பையுடன்
ஊடே நடக்கிறேன் நான்.
'அட நீ கூட வளர்ந்துவிட்டாய்'
ஒரு பூவரச மரம்.
ஓகோ—
எல்லாமே மாறியிருக்கின்றன.
அம்மாவும் அக்காவும் தங்கையும்
நண்பன் மணியும் கூடத்தான்.

* *

பயணப் பையை விரித்து
விசுக்கோத்துத் தேடும்
மூக்கில் சளி வழியும்
என் பக்கத்து வீட்டுச் சிறுர்கள்.

* *

எல்லாவற்றையுமே
மோவாயில் விரல்வைத்து
அடக்கி அனுப்பிய

www.padippakam.com

என் அம்மா சொன்னாள்
"நேற்றுத்தான் உனைத்தேடி
அந்த மிருகங்கள் வந்தன"

*     *

தலை விரித்தாடும் பனைகள்
தலை அசைத்து விடைகொடுக்கும் பனைகள்
ஊடே
பயணப் பையுடன் நான்.

படிப்பகம்

www.padippakam.com

# பரகசியமான விஷயத்திற்காக
# இரகசியமாய் உயிரை மாய்த்த
# என் நண்பர்களுக்கு

உன்னைப்பற்றிய உண்மையை
ஒருவருக்கும் தெரியாமல்
பாதுகாப்பதில் நீ வல்லவன்தான்.
நன்றியும் பாராட்டும்
என்றும் உரித்து உனக்கு.

*    *

போடா போ
நீயும் உன் உண்மையும்.

*    *

உன் காதலி வதனி-
ஒருவருக்கும் அறியாது கொடுத்த
ஆயிரம் முத்தங்களின்
கோணங்களையும்
ஒரே இரவில்
ஆயிரம் கணங்களில்
எனக்கு அவிழ்த்தவன்தான் நீ.

*    *

படிப்பகம்

www.padippakam.com

உன் சோதரி
ஆடை மாற்றும்
அறையினில் கூட
எனக்கும் உனக்குமாய்
ஒரு துவாரத்தை அமைத்தவன்தானே நீ.

*     *

இன்று மட்டும்
ஏதோ பெரியன்போல்
உன்னைக் காப்பாளனும்
எனக்குத் தெரியாமல்
'சயனைட்டைக்' கடித்திருக்கிறாய்.

*     *

போடா போ
நீயும் உன் உண்மையும்.

படிப்பகம்

www.padippakam.com

# அவனிடமிருந்தோர்
# உலகம் எழுகிறது

பற்றைகளினூடே சிறுவன் மறைந்தான்.
பயந்தவன்தான் அவன்,
எனினும்—
அவதானிப்பிலும் அந்நியர்களிலும்...
கவனம் செலுத்துபவன்.

* *

வந்தவர்கள் அந்நியர்கள் என்பதை
எப்படியோ கண்டுகொண்டான்.
அவர்கள் அணிந்திருந்த
'இரும்புச் சப்பாத்து'—கண்டுபிடிப்பதற்கு...
அவனுக்கு உதவியிருக்கலாம்.

* *

அவன்—
செய்ததெல்லாம்
இதுதான்

* *

தான் வைத்திருந்த
ஒரு 'வில்லை'யை
வாயினுள் போட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

**"எனக்கு ஒரு பஸ்சுக்கும்—
இலங்கையில் உண்மையான ஒரு
யுத்த நிறுத்தத்திற்கும்
வரங்கொடு தேவதையே"**

படிப்பகம்

www.padippakam.com

# காணி நிலம் வேண்டும் பராசக்தி

பனைகள் வரிசையாக நிற்கும்
பச்சைக்கு மேல்
பச்சை பச்சையாய் கிளிகள்
பறந்து திரியும்.
கூலி வேலை செய்யும் குமரிகள்—
செல்வி, லட்சுமி, பூமணி
வயல் வரப்பில்
வரிசையாய் நடக்கும் பெண்கள்.

*  *

வெங்காயம் விலை பேசவரும் தரகர்கள்.
வெண்டைக்காய் முற்றல் என
முறையிடும் முதியவர்கள்.
பஸ்சில் வரும் போது
இவர்களை நான் பார்ப்பேன்.

*  *

இப்பொழுது நான்
பஸ்சில் வருவதில்லை.
எப்பொழுது வருவேனோ
எனக்கும் தெரியாது
இப்பொழுது இவர்கள்
எப்படி இருப்பார்கள்?
இவர்களுக்கு என்ன ஆகியிருக்கும்?

*  *

படிப்பகம்

www.padippakam.com

# மனிதர்கள்

அவர்கள் சொல்கிறார்கள்
''நாங்கள் இழந்துவிட்டோம்'' என்று

*     *

அன்னியர் உறுத்தினர்
''எதை இழந்தீர்கள்'' என்று

*     *

இழந்தவர்கள் மீண்டும் சொல்லுகிறார்கள்
''புரியவில்லையா—
உங்களுக்குப் புரியவைப்பதற்கு
எந்த மொழியும் சாத்தியமில்லை.
பொய் உரைக்கும் மானிடர் நாமல்ல
குருதி வழிந்த பின்னரும்
கொள்கை உரைக்க
நாம் தயாரில்லை''

*     *

உறுத்தியவர்கள் மீண்டும்...
''கொள்கைக்கும் குருதிக்கும்
என்ன தொடர்பு......!''

*     *

சொன்னவர்கள் மீண்டும்...
''நாங்கள் மனிதர்கள்''.

படிப்பகம்

# சுயட மரணம்

என் தம்பி
இறந்த காரணம்
ஊர றியும்
(காதல் தோல்வி
தற்கொலை)
*   *

என் தாத்தா
இறந்த காரணம்
ஊர றியும்.
(முதிர்வு-தொய்வு)
*   *

என்னூர் விதானை
இறந்த காரணம்
ஊர றியும்.
(இலங்கை ரேடியோ
மரண அறிவித்தல்)
*   *

மூன்று வீடுகள் தள்ளி
முத்து லச்சுமி
இறந்த காரணம்
ஊர றியும்,
(தந்தை பெயர் தெரியாத
மைந்தன் வயிற்றினுள்)
*   *

நானும் இறந்து விட்டேன்
காரணம் அறியுமா ஊர்?

www.padippakam.com

# கடக்க முயலும் முகங்கள்

'இரண்டே போதும்' என்ற பின்னரும்,
இரைந்து கிடக்கும் 'மெட்ரூஷ்'
எனினும்—
மேற்கு மாம்பலம் வீதிவழியே
இடித்தபடி...நசிந்தபடி...கடிந்தபடி...
முகங்களைக் கடக்கிறேன்.
எல்லையம்மன் கோவில் தெருவளைவில்—
காலைச் சற்று விந்தி...விந்தி...
முழுப் பாவாடையுடன்
பார்ப்பனப் பழுப்பு நிறத்தில்
அவள்—அந்த முகம்.
முகத்திற்கு முகம்
கடக்க முயல்கையிலும்
நெஞ்சை நெருடி...
இதயத்தைக் கொன்று...
ஆத்மாவை ஆட்டுவித்து...
இந்தக்கலை அவள்—அவளுக்கேயுரியது.
அடிப்பாவி—
நீயெங்கே வந்தாய் இங்கு?
நீ—
எங்கும் வருவாய்
நான் போகுமிடமெல்லாம்
நீ வருவேனென்கிறாய்.
சரி, வா!
நான் கூப்பிடும் போது மட்டும்
ஏன் மறுத்தாய்?

www.padippakam.com

# என் பழைய ஸ்நேகிக்கு

''நீ வாழ்ந்த இடங்களில்
நானும் சில காலங்கள்
உன்னுடன் வாழ்ந்திருக்கிறேன்.''
இது ஒன்றே போதுமா
உன்னைச் சொல்லி
மேலும் சில காலங்களை
ஓட்ட எனக்கு?

*      *

சும்மாகிட
உன்னை எக்கணத்திலும்
நான் நினைப்பதில்லை.
நீ ஒன்றும்
எனது எல்லாவற்றையும்
ஆக்கிரமிப்பதுமில்லை.
எப்பொழுதாவது...சும்மா
வருகிறாய் போகிறாய்
அவ்வளவுதான்.

*      *

எனது மனைவியுடன்
குழந்தையுடன்
நான் சூர்ய உதயத்தை...அஸ்தமனத்தை
ரசிக்க முடியும்
என்பதற்கு
நீ ஒன்றும் சாட்சி சொல்ல வேண்டியதில்லை.
ஆனால்,

www.padippakam.com

ரசிக்க முடியாதென்பதற்கு
உன்னைத் தவிர
வேறு சாட்சியங்களும் இல்லை.

*   *

வாழ்ந்து வெல்வோம்
வா என்றேன்
முடியாதென்றாய்.
சரி,
வாழ்ந்து கெடுவோம்
வா என்றேன்
முடியாதென்றாய்.

நான் வாழ்ந்து
வென்றும் கெட்டும்
கொண்டிருக்கிறேன்
இது எப்படி என்கிறேன்?

*   *

அப்போதிருந்த
நாங்களில்லை நாம்.
சும்மா சொல்லு
எப்படி இருக்கிறாய் நீ?

*   *

உன்னுடன் பேசுவதற்கு
பகிர்வதற்கு
நிறைய விஷயங்களிருக்கின்றன.
என்றெல்லாம்
சாட்டுச் சொல்ல மாட்டேன் நான்.
எனக்கு எழுத மட்டும் தெரியும்
இதுவும் ஒரு சாட்டுத்தானே?

*   *

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கணப்பொழுதில்
ஒரு பிறைநிலவின்
ஒளிக் கீற்றில்
முகம்—முகம் முகத்திற்கு முகம் நீ.

இப்பொழுது—
ஒரு கணப்பொழுதில்
ஒரு பிறைநிலவின்
ஒளிக் கீற்றில்
ஆயிரம் ஆயிரம் முகம்

நானென்றும் உன்னைப் புகழ்ந்து
சொல்லவில்லை.
அந்தக் காலம் அப்படி.

*   *

விதி என்று சொல்ல முடியாது.
உனக்குச் சௌகரியமாயிருந்தால் சொல்.
நினைத்துப்பார் நண்பி.
எமது காலங்கள்
நன்றாக இருந்ததில்லையா?
'ஆம்' சொல்வதற்கு
இன்னும் ஏன் தயங்குகிறாய்?
இன்னும் எதையாவது இழந்துப் போட்டு
அவஸ்தைப் படுகிறாயா?
படு.
இன்னும் ஒன்றும் காலங்கடந்து விடவில்லை.
எனக்கு—
தாடி மயிரில்தான்
நரை விழத் தொடங்கியிருக்கிறது.

*   *

www.padippakam.com

# முகங்கள் தான்

அவளது முகத்தை விடவும்
மூலைகள் எதையும் சொல்லவில்லை,
ஒரு முகத்தில்—
பல நூறு முகங்களைப் பார்த்தேன்.

*     *

நாழிகைகளும் ரூபாக்களும்
கழிந்து கொண்டிருந்தன,
நான் அவளைச்
சொற்பக் கணங்களில் பிரியப்போகிறேன் தான்.
பிரிவு நிச்சயம் என்ற பின்னரும் உறவு.
உறவுக்கும் ரூபாக்களும் என்ன உறவு?
உறவுக்கும் நாழிகைகளுக்கும் என்ன உறவு?
உறவுக்கும் உடலுக்கும் என்ன உறவு?

*     *

மானிட உறவை
மனிதர்களா நிச்சயித்தார்கள்?
உறவு இல்லாது
உலகமே இயங்குவதில்லை.
அர்த்த நாரீஸ்வரனைப் பாருங்கள்.

*     *

நியதிகளை நிலைநிறுத்தி
நீள்கிறது பிரபஞ்சம்,
பிரபஞ்ச உண்மையைத்
தெரிந்து கொண்டோர்க்கு ஏது நியதி?

*     *

படிப்பகம்

www.padippakam.com

**அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்**
**முகங்கள் தான்**
**முலைகள் அல்ல,**

படிப்பகம்

www.padippakam.com

# தோற்றுப் போன நான்

உதடு...
கண்கள்...
மேனி...
களைத்துப் போயிற்று.

* *

நான் நடந்தேன்
நடந்த சம்பவத்தை மீட்டபடி
நண்பர்கள் சொன்ன
நனவுலகம்—
ஏதோ ஏதோ வெல்லாம் சொன்னார்கள்,
எப்படி எப்படி யெல்லாமோ வர்ணித்தார்கள்.

* *

எனக்கு எதுவும்
அவர்கள் உணர்ந்ததுபோல்
தெரியவில்லையாக்கும்.
எதுவும் எவரும் உணர்வதுபோல்
தெரிவதில்லையாக்கும்.
எதுவும் எவருக்குமே
உள்ளது உள்ளபடி
தெரிவதில்லையாக்கும்.

* *

நான்—
களைத்து விட்ட பின்னரும்
நண்பர்களைத் தேடித்தான் நடக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கணம் இப்படிக் கழிந்து போயிற்று.

அவன் எதை எதையெல்லாமோ கடித்தான்.
முக்கி...முனகி...முனகலுடன்
முணு முணுத்து முயன்று முயன்று
விசும்பலுடன் முடிந்து போயிற்று
அது!

*   *

அரை விழியை இமை மூட
அதரம் துடித்து நடு நடுங்கி
மேனி வியர்த்து...புல்லரித்து...
அவள் முகடு பார்க்க,
அவனோ—
நசிந்து போகும் நலிவுடல் எண்ணி
ஏங்கி விறைத்து
நன்னி...நன்னி
பண்ணிப் பண்ணி...
முத்தாய் வியர்வை முகத்தில் விழும்வரை
முயன்று...தோற்று...வென்று
முயங்கி...
முகம் புதைத்தான் முலையில்

*   *

பிரக்ஞை தொட்டது ஆத்மாவை
துடித்தான்.
துடித்தான்.

படிப்பகம்

ஆத்மாவின் அடியில் 'அடி' விழுந்தது.
உறவும் பயமும்
உறவும் பயனும்
விழிக்க...விழிக்க...
வியர்த்து...வியர்த்து
ஓடினன்.
ஓடினன்.
எங்கே...எங்கே...?

*    *

உலகம் மௌனித்திருந்தது.

# மேலும் புதியவர்கள்

மார்கழிப் பின் பனியில்
நிலவுகூட மறையாத அந்த
அதிகாலை விடியலில்
நானும் அவனும் நடந்தோம்.

*   *

அவனே—
வெங்கொடுமைச் சிறையிலிருந்து
எப்படியோ மீண்டவன்.
விழுப்புண்களையும் காட்டினான்

*   *

நானே—
வியந்து...வியந்து... ஆச்சரியத்துடன்
அவனுடன் நடக்கிறேன்

*   *

அதிகாலைக் காக்கைகளின்
கரைதலூடே கனத்தது
அவன் குரல்—
''என்னை என்ன செய்தார்கள் தெரியுமா?''

*   *

''வேண்டாம் நண்பனே
எதையுமே சொல்லாதே.

இனியும் நாங்கள்
இந்த இடத்தில் இருக்க வேண்டாம்.
நானும் உன்னுடன் வருகிறேன்.''

*  *

நிலவு இன்னமும் மறையவில்லை.
சூரியன் இன்னமும் உதிக்கவில்லை.

www.padippakam.com

# புரிதல்

ஒரு நாள்...
24 மணி நேரம்...
ஒரு மணித்தியாலம்
ஒரு வினாடி
கணங்கள் எப்படிக் கழிகிறது பார்த்தாயா?

*    *

காலத்தின் கழியும் கணங்களை
பாலத்தின் ஒரு மூலையிலிருந்து பார்த்திருந்தோம்.
கீழே ஆறு
நீ பிடுங்கிப் போட்ட இலை
நதி அலைகளுக்கூடே
இன்னும் தத்தளிக்கிறது பார்த்தாயா?

*    *

இயற்கை...
அழகு...
பிடுங்கப்பட்ட இலைகள்...
அலைக்கழியும் நான்...

*    *

இவற்றில்
எது பிடிக்கிறது உனக்கு!
20 வருடங்களில்
எத்தனை கணங்கள்...?



படிப்பகம்

www.padippakam.com

# ஏன்?

காலை தோன்றி
மாலை மறைதல்போல
கவிஞர்கள்...கலைஞர்கள்

*        *

எப்படி வந்து
எப்படி போகிறார்கள்?

*        *

பேசியும்...மகிழ்ந்தும்
கூத்தடித்தும்
கனவுகள் கலைந்தும்
கலையும் கலைஞர்கள்

*        *

காலையும் மாலையும்
விதிக்குட்பட்டதெனின்
இதுவும் விதியோ எனக்கு.

படிப்பகம்

www.padippakam.com

# உங்களையும் விட

இது—
காமமென்று சொல்வார்கள் சிலர்.
இல்லை
காதல்தானென்று உரைப்போருமுளர்.
*   *

காதல்—காமம்
எப்படியோ
இனங்காணும் எனது மனிதர்கள்.
*   *

மன்மதனும் ரதியும்
பாரதியும் கண்ணம்மாவும்
அர்ச்சுனனும் பாஞ்சாலியும்
ஏது சொன்னார்கள் உங்களுக்கு?
காதலா?
*   *

ராதா கிருஷ்ணனையும்
ஸ்ரீராமனையும்
மறவுங்கள்
விடுங்கள்.
*   *

காலம் –
காதலையும் காமத்தையும் கடந்தது.
நீங்கள் எப்படியோ
நான்—
தேடி அலைகிறேன்
இவை இரண்டையும் விட!

படிப்பகம்

www.padippakam.com

# தப்ப விரும்பும் தலைமுறைகள்

நான்—
உண்டுகளித்த வீட்டில்
ஒரு அம்மா இருந்தாள்.

*        *

அம்மா என்ருல்—
அவளுக்கு 65 வயதிற்கு மேல்
தலை நரைத்த கிழவிஅவள்.
அவளுடன் 'அஞ்ஞாதவாசம்' புரிகிறேன்.

*        *

அவள் கேட்டாள்
'ஏன் மேனே உனக்கித்த வேலையெல்லாம்
நீ பாட்டுக்குப்
'பிராக்கைப் பாத்துக் கொண்டு
(F) பிரான்சுக்குப் போகலாந்தானே?'

*        *

நான் சிரித்தேன்,
மனித இருப்புக்கு
அட்வைஸ் சொல்கிருள்.

*        *

என் அன்புக்குரிய பாட்டியே—
எனக்கு மூத்த மூன்ருவது தலைமுறையே
நன்றியம்மா.

*        *

படிப்பகம்

www.padippakam.com

தப்ப விரும்பும் எவனும்
'அஞ்ஞாதவாசம்' புரிவதில்லை
போராளிகள் எப்பொழுதும்
தப்ப விரும்புவதில்லை.

---

* பிராக்கு—சோலி

படிப்பகம்

www.padippakam.com

# என் சுற்றம்

'அம்மா' எப்பவும் அம்மாதான்
எனக்குத் தாடி நீண்டு
தலை நரைத்து
முகத்தில் சுருக்கங்கள் கூடி
ஒல்லியாய்
'அல்ககோல்' மணம் வீசும் உடம்பாய்
மூலையில் சுருண்டபடி கிடக்கும்
என்னைப் பார்த்து
"உனக்கேன்ரா இந்த
வேலையெல்லாம்?"
அம்மா நீ எப்பவும் இப்படித்தான்
நான் கேட்கும் கேள்விகளை
திருப்பித் திருப்பி
என்னையே கேட்டால்...?

* *

செத்தவனைக்கூட
எழுப்பி மீண்டும் கொல்லும்
வ(சை)தை மொழிகள்
பத்தினியின் வாயிலிருந்து
உதிரும் போது, எனக்கு விடியல்.
பத்தினிப் பாசுரங்கள்
'ஸ்ரவ்' அடுப்பின் சுருதியுடன்
கையில் காப்பி வரும்வரை.

* *

எதுவும் பேசுகிற
எதுவுமே பேசாத

படிப்பகம்

www.padippakam.com



சிறிது பேசுகிற
நிறையப் பேசுகிற
சமுத்திரத்தில் துடுப்புத் தொலைத்துவிட்ட
ஓடக்காரர்கள்
நண்பர்கள்...?

*     *

எப்போதெனினும்
சன நெரிசலினூடே
சிறிய இடைவெளியில்—
ஒரு மின்னலாய்...
ஒரு ஒளிக்கற்றையாய்
அழகாய் மிக அழகாய்த் தெரியும்
ஒரு பிராமணப் பெண்ணின் முகம்.
'மற்றுஸ்' மனிதர்களூடே
கணப்பொழுதில்
மங்கலாய் அது மறைந்தும் போகும்.
முதல் முதல் 'கேசரி ஸ்கூல்' போகும்
இரண்டே முக்கால் வயதுக்
குழந்தையின் மிரளல் போல்
எல்லாமே பரிச்சயமற்றதாய்
மிரள மிரள
சுற்றிச் சுற்றி
ஆத்மா தாளுகவே
'அல்ககோல்' நாடும்.

*     *

சிலவேளைகளில்—
புறப்படு என்று நெஞ்சு சொல்ல
திரிதல், அலைதல்,
'இசம்'களில் அறிவு தோய்ந்து
அலைக்கழிந்து

www.padippakam.com



உட்காரும் போது
எனக்கே வெளிச்சமாய்
எனக்கே இருட்டாய்
குப்பைக் கூடை
நிறைந்து போகும்.

*　　*

பத்திரிகை நடத்தக் கூடியவன்
'புரூப்' திருத்துகிறான்.
'சீவ்' எடிட்டராய் இருக்கக் கூடியவன்,
'சப்' எடிட்டராய் இருக்கிறான்.
'ஆர்ட்' படத்திற்கு
இலக்கணம் சொல்பவன்
'மசாலாப்' பண்ணுகிறான்.
அற்புதக் காவியம் படைத்தவன்
அற்பனாய்த் திரிகிறான்,
தத்துவ வித்தகன் தனிக்காட்டு ராஜா
தத்தளித்துத் தத்தளித்துத்
தனக்கே புதிராகிறான்.
எல்லாமே கூத்து..
தெருக்கூத்து.

*　　*

காத்திருப்புகள்
அர்த்தமற்றுப்போய்...
கனவுகளுடன் வாழ்க்கை.
கனவுகள் இனிமை தரும்.
இரவு நீளாதா என மனம் ஏங்கும்.
கனவுகளுடன்கூட
ஐக்கியப்படுதல் சாத்தியமில்லை.
எதனுடனும்,
ஐக்கியப்படுதல் சாத்தியமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

'நான்' என்பது எங்குமே எதிலுமே
தனியாய்த் தெரிகிறது.
'அத்வைதம்' பற்றித்
தெரியாமலே இருந்திருக்கலாம்.
எதுவுமே தெரியாமல் இருந்திருக்கலாம்.
எதுவுமே இல்லாமல் இருந்திருக்கலாம்.
எப்படியும் இல்லாமல் இருந்திருக்கலாம்.
எல்லாம் 'இருந்திருக்கலாம்' தான்
'இருக்கலாம்' என்றில்லை.

*　　*

படிப்பகம்

www.padippakam.com

# அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்

''அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்''
என—
அவர்கள் சந்தேகித்தார்கள்.

* *

பனி படர்ந்திருந்த
ஒரு காலையில்—
தேயிலைச் செடிகளின் மத்தியில்
நின்றிருந்த ஆறுமுகம்
தன்னவனைப் பற்றி...
நீண்டு கறுத்துக் கிடந்த
சிங்கமலைச் சுரங்கம் வழியே—
அடம் பிடிக்கும் அவனை
இழுத்துச் சென்றதவ் வண்டி,
சிறிமா—சாஸ்திரி
ஒப்பந்தம்,
விரித்த வலையில்
சிக்கிய மீன்கள்

* *

தேயிலைக் கொழுந்திடையிருந்தோர்
ஒருவன் எட்டிப் பார்க்க...
செந்நிற வானிடை
இரண்டு குருவிகள் எழுந்து பறக்க...
அந்த அந்தியில்—

படிப்பகம்

www.padippakam.com



தனது நிலம்,
அடகுவைக்கப்படும் அந்த நிகழ்வை
ஆறுமுகம் பார்த்திருந்தான்.

* *

கையை மோவாயில் வைத்து
கண்களை மூடிய
ஆறுமுகத்தின் மோனத்தில்...
எனது தம்பியை
வீட்டு வேலைக்காய்
அழைத்துச் சென்ற
யாழ்ப்பாணத்து மாஸ்டர் மார்.
இப்பொழுதெல்லாம்
இயக்கத்திற்கு
ஆட்சேர்க்க
எனது நிலத்திற்கு வருவது...
காட்சியாய் கனவாய்
கலங்கலாய்...கலர் கலராய்
கண்ணைப் பறிக்கும் ஒளியாய்...

* *

முப்பதுக்கும் மேற்பட்ட
ஆண்டுகளாய்...
இப்போதும் துளிர்க்கும்
கொழுந்துத் துளிர்களின்மீது ஆணையாய்...
ஒரு சவுக்கு மரம்
ஒரு முருகன் கோயில்
ஒரு நெடிய பாறையின் உச்சியில் பூத்த மலர்
ஒரு தீபாவளியில் கேட்கும் வெடியோசை
ஒரு துருப்பிடித்த கவ்வாத்துக் கத்தி
ஒரு—ஆட்டுப் புழுக்கைகள் நிறைந்த பள்ளிக்கூடம்.

படிப்பகம்

ஒரு—இடிந்து விழுந்துவிட்ட சேர்ச்(Church)
ஒரு—பிரிட்டிஷ்காரனை ஞாபகப்படுத்தும்
துரை பங்க

ஒரு சல சலத்து ஓடும் நதி
ஒரு...ஒரு...ஒரு...
துகள் மண்
இருக்கும் வரையும்
இந்த ஆறுமுகத்தை
யாராலும் விரட்டி விட முடியாது''
நிசப்தம் நிலவும்
அந்த இரவின்
அமைதியைக் கிழித்து
இப்படி
உரத்துக் குரல் கொடுக்க முடியா நிலையில்
கைகளைப் பின்னால் கட்டி
கற்பாறையில்
ஆறுமுகம் உட்கார்ந்திருந்தான்.

* *

துயரத்தின் எல்லைகள்
விரிந்து விட்ட நேரத்தில்
தேசத்தின் எல்லைகளுக்கு
ஏது அர்த்தம்?

* *

இனம் கடந்து
பிரதேசம் கடந்து
சாதி கடந்து
மதம் கடந்து
மாங்காய்த்தீவின்
மலை உச்சி ஒன்றில்
கேட்டது வெடிச்சத்தம்.

* *

www.padippakam.com



தலைவர்கள் எப்பொழுதும்
தலைவர்கள்தான்.
ஒன்பது மைல் தூரம் சென்று
ஓட்டுப் போட்டபின்
வந்த திருப்தியும்
தலை மாட்டில் தலைவனின்
படம் வைத்து
உறங்கிய நினைவும்
ஒவ்வொரு வாக்கியத்திலும்
மேனி புல்லரிக்க
ஒலி பெருக்கி முன்பு
உட்கார்ந்திருந்தமையும்,
ஒரு கணப் பொழுதில்
கண்களில் நிறைய...
என்னருந் தலைவனே நீ
வாக்கு மறந்து
சொல் மறந்து
ஆசனம் நாடி
இருக்கை நாடி
எமது வயல்களில்
எரியா நெருப்புடன் விளையாடி
எமது மழலைகளின்
மண் வீடுகளில் கால் வைத்து
எமது முற்றங்களின்
கோலங்களில் சிறுநீர் கழித்து
எமது கோவணங்களைக் கூட
உன் கட்சிக்
கொடியாய் மாற்றி...
அடச்சீ நாயே...
நான் கீதமிசைக்கும் வேளையில்
என்னைக் கோஷமிடவைக்காதே!

* ●

www.padippakam.com

ஆறுமுகம் வானத்தைப் பார்த்தான்,
அவர்கள் அவனையே பார்த்தார்கள்,
ஆறுமுகம் மண்ணைப் பார்த்தான்,
அவர்கள் அவனையே பார்த்தார்கள்,
ஆறுமுகம் கண்களை விரித்துப் புறத்தைத்
துளாவினன்,
அவர்கள் அவனையே பார்த்தார்கள்,
ஆறுமுகம் கைகளை இறுகப்பிசைந்தான்,
அப்பொழுதும்—
அவர்கள் அவனையே பார்த்தார்கள்,

*      *

ஆறுமுகம்—
எதுவோ பேசுவதற்கு வாயெடுத்தான்,
அப்பொழுது—
அவனைக் கைது செய்த
அந்த மிருகங்கள்...
"அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்"
என—
சந்தேகித்தன.

'உள்வெளி' — கவிதைத் தொகுதி
ஆசிரியர் — க. ஆதவன்
முதற் பதிப்பு — 01-10-1985
உரிமை — திருமதி மல்லீஸ்வரி ஆதவன்.
No. 16, 10 வது குறுக்குத் தெரு
இந்திரா நகர் — அடையாறு சென்னை
அட்டை ஓவியம் — விஜய்
விலை — 5—00